சுதேசமித்திரன்

வாழிய செந்தமிழ் — வாரப்பதிப்பு — வாழ்க நற்றமிழர்

Vol XXV] விஜயஞு மாசிமீ 17உ ★ 1954ஞு பிப்ரவரிமீ 28உ [No 4


# சட்ட சபை வேலைகள்

சென்னை அஸெம்ப்ளி, கௌன்ஸில் கூட்டத்தை ஆரம்பித்து வைத்த கவர்னர் உணவுப் பிரச்னைக்கு முதலிடம் கொடுத்தது முறையே. தொடர்ச்சியாகப் பல ஆண்டுகளாக நம்மை வாட்டி வதைத்து வந்த இந்த நெருக்கடி இவ்வாண்டு விசேஷமாகத் தளர்ந்திருக்கிறது. எனினும் பிறரிடம் கையேந்தாத நிலையை நாம் அடைந்துவிடவில்லை. இன்னும் பற்றுக்குறை உண்டு. ஆனால் இந்திய சர்க்கார் நமது தேவையை முற்றிலும் பூர்த்தி செய்ய ஒப்புக்கொண்டிருக்கின்றனர். கவர்னர் சுட்டிக்காட்டியதுபோல், இப்போதைக்கு நமது உணவுக் கஷ்டம் தணிந்திருக்கிறதாயினும், இதற்கு நிலையான பரிகாரம் விளைவிப்பதில் நமது முயற்சியைத் தளர்த்திவிடக்கூடாது. ஆனால் இங்கு மேன்மேலும் பிரம்மாண்டமான பாசனத் திட்டங்களை மேற்கொள்ள இடங்கிடையாது. தமிழ்நாட்டில் தற்போது வீணாகப் போகும் ஆற்று ஜலம் அதிகமில்லை. அதையும் நாம் பாசனத்துக்குப் பயன்படுத்திக்கொள்ள வகை செய்வது அவசியமே. ஆனால் உணவு உற்பத்தி கணிசமாகப் பெருக தற்போது சாகுபடியாகும் நிலங்களின் விளைவை மேன்மேலும் அதிகரிக்கும் முறைகளை முக்கியமாக நாம் கையாண்டாக வேண்டும். இன்னும் தரமான விதை, எரு முதலிய வற்றைக்கொண்டு ஏற்பாடான முறையில் சாகுபடி செய்தால் விசேஷமான பலன் காணக்கூடுமென்பது அனுபவபூர்வமான உண்மை. நவீன ஆராய்ச்சிகளின் பலனும், மற்ற வசதிகளும் விவசாயிகளுக்குக் கிடைக்க வகை செய்வது சர்க்காரின் கடமை. ஆனால் விவசாயிகள் கடன் ஒத்திவைப்புச் சட்டம், ஏற்கெனவே அவர்களுக்கிருந்த முக்கியமான வசதியொன்றையும் நிலைகுலையச் செய்திருக்கிறது.

உணவு உற்பத்தியைப் பெருக்குவதோடு, பொதுவாக மற்ற வகையான தொழில்கள் செழிக்கவும் வகை செய்தாலேயே மக்களின் வாழ்க்கைத் தரம் உண்மையில் உயரக்கூடும். இதற்கு மின்சார விசை தாராளமாகக் கிடைக்க வகை செய்வது மிக்க உபயோககரமாயிருக்கும். இவ்விசை உற்பத்தியைப் பெருக்க, உள்ள சாதனங்களைக் கூடியவரை பயன்படுத்திக்கொள்வதுடன், நெய்வேலிச் சுரங்கத் திட்டத்தை நிறைவேற்றி வைப்பதில் இன்னும் தீவிர கவனம் செலுத்துவது அவசியம். இத்திட்டம் நாம் எதிர்பார்ப்பதுபோல் நடந்தேறுமாயின், இந்த ராஜ்யத்தின் பொருளாதாரத்தில் ஒரு சொற்ப காலத்துக்குள் புரட்சிகரமான மாறுதல் ஏற்படக்கூடும். லாபகரமான முறையில் கரியை வெட்டியெடுத்து உபயோகிப்பதற்கான வழிபற்றியும், இதற்குத் தேவையான மூலதனத்தை எவ்வாறு திரட்டுவதென்றும் சர்க்கார் ஆலோசித்து வருவதாகக் கவர்னர் குறிப்பிட்டுள்ளார். திட்டத்தின் முக்கியத்தை உணர்ந்து அதைத் துரிதமாக நிறைவேற்றி வைப்பதற்கான நடவடிக்கைகள் அனைத்தையும் அவர்கள் எடுத்துக்கொள்வரென்று எண்ணுகிறோம்.

இந்த ராஜ்யத்தில் அமுலுக்கு வந்துள்ள புதிய ஆரம்பக் கல்வித் திட்டத்தை மத்தியக் கல்வி போர்டு அங்கீகரித்திருப்பதுபற்றி கவர்னர் பெருமையுடன் குறிப்பிட்டிருப்பது இயற்கையே. இத்திட்டத்தின் நோக்கம் இனிது நிறைவேறி வருவதற்கான ருசுக்களும் அதிகரித்து வருகின்றன. ஆயிரம் மக்களுக்கு மேலிருந்து ஆரம்பப் பள்ளிகள் இல்லாமலிருக்கும் கிராமங்களில் எல்லாம் அத்தகைய பள்ளிகள் ஏற்படுத்த சர்க்கார் உத்தேசித்திருக்கின்றனர். வரும் ஆண்டில் 1270 புதிய பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தவிருப்பதாகவும் கவர்னர் தெரிவித்துள்ளார். கல்வியின் வளர்ச்சியைப் பற்றியவரை, அரசியல் சட்டத்தில் குறித்த உத்தேசத்தை நிறைவேற்றி வைப்பதில் திருவாங்கூர்-கொச்சிக்கு அடுத்தபடியாக நமது ராஜ்யமே முன் நிற்கிறதென்று நாம் பெருமை கொள்ளலாம்.

ஆனால் புதிய சட்டங்கள் இயற்றும் விஷயத்தில் மற்ற பல ராஜ்யங்களில் காணும் அஜாக்கிரதை இங்கும் பூர்ணமாக இருந்துவந்திருக்கிறது. மின்சார விசைக் கம்பெனிகளின் சொத்து ஆர்ஜிதச் சட்டம் செல்லாதென்று சில தினங்கள் முன் ஸுப்ரீம் கோர்ட் விடுத்த தீர்ப்பு இதற்கு மற்றொரு அத்தாட்சி. நமது சர்க்கார் இயற்றியுள்ள சட்டங்களின் குணதோஷங்களைப்பற்றி இங்கு நாம் ஆராயவில்லை. இச்சட்டங்கள் நமது அரசியல் சட்டத்திலுள்ள ஷரத்துகளுக்கு ஒத்தவைதானா என்றுகூட அவர்கள் பரிசீலிக்காமல் அவசரம்-அவசரமாக நிறைவேற்றி அமுலுக்குக் கொண்டுவருவதையே இங்கு குறிப்பிடுகிறோம். மேற்கொண்டு இந்த விபரீதத்தைத் தடுக்க சட்ட ஞானமுள்ளவர்கள் அடங்கிய ஒரு கமிட்டியை நியமித்து எந்த மசோதாவாயினும் அதை முதலில் அக்கமிட்டியின் பரிசீலனைக்குள்ளாக்குவது உசிதமல்லவா என்று சர்க்கார் யோசிக்க வேண்டுகிறோம்.